**கவனிக்க.-** 2017.05.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டிற்கான காலி மற்றும் பலப்பிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2019 - 2017 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2017.05.12

*2019 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 854 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 852 | ஏல விற்பனைகள் | 861 |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | 853 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலம் 2017, மே மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை

சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை

1. ஊர்காவற்றுறை நீதிவான் நிதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் 2017.07.29 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில்விற்பனைசெய்யப்படும்.

2. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏலவிற்பனை குறிப்பிட்ட தினத்தில் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. பதிவாளரின் அனுமதிபெற்ற ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் ஏல விற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களை பொதுமக்கள் பார்வையிடலாம்.

4. நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றில் விருப்புரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏல விற்பனையிலிருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

5. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக பணம் கொடுக்கப்பட்டு நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். எல்லா கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

ஏ.எம். முஹமட் ரியால்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருட்கள் |
|---|---|---|
| 1. | AR/89/15 | NP JQ 6289 ஆம் இல. உந்துருளி |
| 2. | AR/340/13 | EP NP 0368 ஆம் இல. உந்துருளி |
| 3. | 7554 | NP MK 5627 ஆம் இல. உந்துருளி |
| 4. | AR/146/12 | 500- 2143 ஆம் இல. உந்துருளி |
| 5. | 3858 | 4039 ஆம் இல. உந்துருளி |
| 6. | AR/278/13 | NP UV 5253 ஆம் இல. உந்துருளி |
| 7. | AR/157/14 | துவிச்சக்கர வண்டி |
| 8. | AR/114/14 | துவிச்சக்கர வண்டி |
| 9. | 4165 | துவிச்சக்கர வண்டி |
| 10. | AR/342/13 | துவிச்சக்கர வண்டி |
| 11. | 6435 | கோடாலி 1, கத்தி 2 |
| 12. | 8035 | வாச்சி 3, கோடாலி 2, ஆப்பு 8 |
| 13. | 8674 | கோடாலி 1, வாச்சி 1 |
| 14. | AR/152/15 | வலை |
| 15. | 7932 | கத்தி |
| 16. | 8131 | கோடாலி 1, மர ஆப்பு 2, ஆப்பு 6 |
| 17. | 7243 | சவள் 1 |
| 18. | 8240 | கோடாலி 2 |
| 19. | 7311 | ஆப்பு 4, கோடாலி 3 |
| 20. | 6581 | கத்தி |
| 21. | 8001 | சவள் |
| 22. | 7261 | சவள் 3, மண்வெட்டி 1 |
| 23. | AR/236/15 | கத்தி 2, வயலின் 1, மண்வெட்டி பிடி 1 |
| 24. | B/78/13 | உக்கிய நிலையில் இரும்புக் கம்பிகள் |
| 25. | 6417 | கோடாலி |
| 26. | B/38/08 | 96 முகட்டோடு, 45 தட்டை ஓடு |
| 27. | B/195/06 | துவிச்சக்கர வண்டி |
| 28. | B/136/06 | துவிச்சக்கர வண்டி |
| 29. | 7593 | துவிச்சக்கர வண்டி |
| 30. | AR/142/14 | துவிச்சக்கர வண்டி |
| 31. | 8547 | முண்வெட்டு 1 , சவள் 2 |
| 32. | 8492 | சவள் 1, பிக்கான் 1, கைக்கோடாலி 1, மண்வெட்டி 1 |
| 33. | 9020 | வாச்சி 1,கோடாலி 1 |
| 34. | 8642 | சவள் 3 |
| 35. | 8510 | கைக்கோடாலி 1, கத்தி 1 |
| 36. | 3780 | குடம் 2 |
| 37 | 9018 | சவள் 2 |
| 38. | 8604 | தகர றம் 4, பிளாஸ்ரிக் றம் 1 |
| 39. | 9300 | சவள் 2 |

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருட்கள் |
|---|---|---|
| 40. | 5639 | கோடாலி 1 |
| 41. | 5920 | பெரியகத்தி 1, சின்னக் கத்தி 1 |
| 42. | 6428 | கோடாலி 1,கத்தி 4 |
| 43. | 7519 | கத்தி 2 |
| 44. | 7476 | மண்வெட்டி 1 |
| 45. | 7383 | கத்தி 1, இரும்புச் சட்டம் 1 |
| 46. | 7094 | கத்தி 1 |
| 47. | 7256 | சவள் 2 |
| 48. | 8602 | சவள் 3, மண்வெட்டி 3 |
| 49. | 9143 | சவள் 2 |
| 50. | 6620 | சவள் 2, மண்வெட்டி 1 |
| 51. | 9506 | நீச்சல் சப்பாத்து 1 சோடி, நீச்சல் கண்ணாடி 1சோடி |
| 52. | 9507 | நீச்சல் சப்பாத்து 1 சோடி, நீச்சல் கண்ணாடி 1 சோடி |

5- 211

---

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில்2017 யூலை முதல் 2018 யூன் வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

**எனது இலக்கம்**: ARA/ ADM/ ADMIN/6/7/5

2017, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2018, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்காக 1982 , ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி கள்ளுத்தவறணை விற்பனைக்காக குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய கேள்விப் பத்திரத்திற்கான பணம் வைப்புச் செய்தமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டும் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தொகையில் 15 % பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் ............. இலக்கம் கள்ளுத் தவறணைக்காக , கேள்விப்பத்திரங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2017.05.17 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் முகமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2017.05.17 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2017.06.07 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மறுவிற்பனைக்காக விடப்படும். அன்றைய தின ஏல முன்வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாக இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. ஆர்.ஏ.என். எஸ். விஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவ.

**அட்டவணை**

| பிரிவு | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆரச்சிக்கட்டுவ | கறுக்குப்பனை | 10 | 2017.05.17 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | ஆரச்சிக்கட்டுவ | 11 | 2017.05.17 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | பத்துளுஓய | 12 | 2017.05.17 மு.ப.10.30 | 1,000.0 |

5-208

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2017.04.06.ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: N.M.G. மனேஜ்மென்ட்ஸ் அட்வைசர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 121515
பதிவு முகவரி : இல.43 A 1/1, ஹெய்க் ரோட், கொழும்பு 4

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

5-222

---

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழானது.-

கம்பனியின் பெயர்: வெலொரெம்ஜுரிஸ் கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 121512
கூட்டிணைப்புத் திகதி : 2017.04.06
பதிவு அவலகம் : 15/1, 15/1, 1/1, மஹாநுக பூங்கா, கொழும்பு3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

D.S.T. மிரிஹான,
கம்பனிச் செயலாளர்.

5-250

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 242 ஆம்பிரிவிற்கு அமைவான ஒருங்கிணைப்பு
எலுமெக்ஸ் பீஎல்சீ
(கம்பனி இலக்கம் பீவீ 539 பீகிவ்)
எலுமெக்ஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
(கம்பனி இலக்கம் பீவீ 112574)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (''அதிகாரச் சட்டம்'') 244(3) ஆம் பிரிவிற்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. கம்பனி இலக்கம் பீவீ 539 பீகிவ் இன் கீழ் கூட்டிணைக்கப்பட்ட எலுமெக்ஸ் பீஎல்சீ கம்பனி இலக்கம் பீவீ 112574 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்ட எலுமெக்ஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்பன அதிகாரச் சட்டத்தின் 242ஆவதுபிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, எலுமெக்ஸ் பீஎல்சீ என்ற பெயரில் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட இரு கம்பனிகளும் அதிகாரச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைய ஒருங்கிணைப்பு நடைமுறைகளைப் பூர்த்தி செய்துள்ளன.

அதிகாரச் சட்டத்தின் 244(1)(a) ஆம் பிரிவிற்கமைய கம்பனிகள் பதிவாளர் நாயகம் 2017, ஏப்பிறல் 07 ஆம் திகதி ஒருங்கிணைப்புச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2017, ஏப்பிறல் 24.

5- 257

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி 2017, மாச்சு 30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் :ஸ்டடி பாத் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*

*பதிவு இலக்கம் :பீவீ 119321*

*பதிவு முகவரி : இல. 26, றொட்னி தெரு, கொழும்பு 8*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,*

*பணிப்பாளா,*
*சீ எல் சீ செக்கிரட்டேரியல் சேர்விசஸ்*
*(பிறைவேட்) லிமிட்டட்*
*செயலாளர்கள்.*

*5- 271*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , கீழ்வரும் கம்பனி 2017, ஏப்பிறல் 17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் :பேட்ரியட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*

*பதிவு இல.:பீவீ 121644*

*பதிவு முகவரி : இல. 27/2, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,*

*பணிப்பாளா,*
*சீ எல் சீ செக்கிரட்டேரியல் சேர்விசஸ்*
*(பிறைவேட்) லிமிட்டட்*
*செயலாளர்கள்.*

*5- 272*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைப்பு அறிவித்தல்:-*

*கம்பனியின் பெயர் :எமா கன்சொடியம் (பிறைவேட்) லிமிட்டட்*

*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.04.06*

*கம்பனி இலக்கம் : பீவீ 121507*

*பதிவு முகவரி : 53/4, கந்தவல மாவத்தை, இரத்மலானை*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,*

*கம்பனிச் செயலாளர்.*

*5- 273*

## கம்பனியொன்றின் பதிவு தொடர்பான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவு தொடர்பானது:-*

*கம்பனியின் பெயர் :கென்டினா லங்கா (பிறைவேட்) லிமிட்டட்*

*கம்பனி இலக்கம் : பீவீ 121433*

*முகவரி : இல. 40, கோல்பேஸ், கோர்ட் 2, கொழும்பு 3*

*செக்கிரட்டேரியல்*
*(பிறைவேட்) லிமிட்டட்.*

*பீவீ 5958*

*5- 285*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : சமாதான ஹீலீன்கே யோகா எகியுபஞ்சர் ( கரண்டி) லிமிட்டட்*

*கம்பனி இலக்கம் : ஜீஎல் 2430*

*பதிவு முகவரி : இல. 31/1ஏ, சுனெத்ரா தேவி வீதி, கொஹுவளை*

*உதிப சன்ன பீரிஸ்,*
*பணிப்பாளர்.*

*5- 298*

---

## கம்பனியின் நிலையை மாற்றம் செய்வதற்கான பொது அறிவித்தல்

*சியெரா கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்*
*(பீவீ 12813)*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் கம்பனித் தீர்மானத்திற்கமைவாக இத்தால் அறிவிக்கப்படுவதாவது, 2017.03.15 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சியெரா கன்ஸ்டரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் முதல் சியெரா கன்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட் வரை கம்பனியின் நிலையானது மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.*

*சபையின் கட்டளைப் பிரகாரம்,*

*பீ.ஆர். செக்கிரடேரியல் சர்விசஸ்*
*(பிறைவேட்) லிமிட்டட்*
*பணிப்பாளர்.*

*5-307*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் :-*

*கூட்டிணைப்புத் திகதி : 2012.03.09*
*பெயர் மாற்றப்பட்ட திகதி : 2017.03.24*
*கமபனியின் முன்னைய பெயர் : ஆதர் எண்டர்சன் செனவிரத்ன பிளான்டேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் புதிய பெயர் : எல்பியுரா ரிங்ரே ( பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இல : பீவீ 84780*
*பதிவு முகவரி : கல்பொத்த வத்தை, 9 ஆம் மைல்கல், இகல எல்பிட்டிய*

கேவை எசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

*5-308*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : என்.எஸ்.என். டிரான்ஸ்போர்ட் அன்ட் கன்ஸ்ட்ரக்சன் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இலக்கம் : பீவீ 104536*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.03.18*
*பதிவு முகவரி : இல. 400/16, சப்புகஹவத்த, தொடங்கொட, களுத்துறை*

கே.வை. எசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்

செயலாளர்.

*5-309*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : ரென்கோ டேரி புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பீவீ 121183*
*கூட்டிணைப்புத் திகதி : 2017.03.29*
*பதிவு முகவரி : 'நிஸன்ஸலா' , சென் செபஸ்தியன் வீதி, காலமுல்ல, களுத்துறை*

கேவை அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

*5-310*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : ரெக்ரூட்மீ (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பீவீ 121202*
*கூட்டிணைப்புத் திகதி : 2017.03.29*
*பதிவு முகவரி : இல.56, டீ மெல் வீதி, நாவல, ராஜகிரிய*

கேவை அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

*5-311*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : டெட்லங்கா ப்ளாண்டேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 121566*
*பதிவு முகவரி : 129/7ஏ, டூவ வீதி, பத்தேகம, பிட்டகோட்டே*
*கூட்டிணைப்புத் திகதி : 2017.04.07*

செயலாளர்கள்.

*5-316*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : ஸ்கை பெயார் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 106011*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, யூன் 01 ஆந் திகதி*

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. E/2,
ஹுசைனியா நகர்,
பாலமுனை-4

அஹமட் இம்ரான் இர்பானா
கம்பனிச் செயலாளர்.

5-338

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹெல்பிங் ஹேண்ட்ஸ் பொ விமென் (கெரண்டி) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : ஜீஎல் 2425
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, மாச்சு 21
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 9/2, ஓடாவியார் லேன், கல்லரச்சல் -03,
சம்மாந்துறை

அஹமட் இம்ரான் இர்பானா
கம்பனிச் செயலாளர்கள்.

5-339

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) இற்கு அமைவாக பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக் கப்பட்டுள்ளன என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பெப்சீடா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 119766
பதிவு செய்யப்பட்ட முகவரி : செக்றடேறியல் ஹவுஸ் அட்வைசறி (பிறைவேட்) லிமிட்டட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு -05

கம்பனியின் பெயர் : ரீச் எஸ்கேப் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 119941
பதிவு செய்யப்பட்ட முகவரி : செக்றடேறியல் ஹவுஸ் அட்வைசறி (பிறைவேட்) லிமிட்டட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு -05

செக்றடேறியல் ஹவுஸ் அட்வைசறி
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

5-340

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவிற்கமைவாக பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : ஜெக் கெலி அன்ட் பாட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 16980
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5
கம்பனியின் புதிய பெயர் : தனமெறா எஸ்டேட் (பிறைவேட்) லிமிட்டட்

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசறி
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

5-341

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த கார்டன் ஒப் த கோட் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 121393
பதிவுத் திகதி : 2017, ஏப்பிறல் 5
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 86/44 E, அம்மன் ஸ்ட்ரீட், நாவலடி, யாழ்ப்பாணம்

கம்பனிச் செயலாளர்.

5-364

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : அல் ஜாபர் இன்டபிரைஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 60895

பதிவு செய்யப்பட்ட முகவரி : இல . 111ஏ, பிரதான வீதி,
பெரிய நீலாவணை,
மருதமுனை, கல்முனை

எம்.சி.நவாஸ்
கம்பனிச் செயலாளர்.

5-366

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் :-

கம்பனியின் முன்னைய பெயர் : ஹெலிகொன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 91458
பதிவு முகவரி : இல. 16, டெம்பல் வீதி, நீர்கொழும்பு
கம்பனியின் புதிய பெயர் : ஹெலிகொன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்.

5-391

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி தனது பெயரை 2017.03.24 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மாற்றம் செய்துள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர் : திஸ்டைம் டிரைவ்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 118385
பதிவு முகவரி : இல. 4251/1, 2/1, ஹவ்லொக் வீதி, கொழும்பு 6
கம்பனியின் புதிய பெயர் : டி எச் எஸ் டைம் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்.

5-392

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த லேக் ஹவுஸ் ஹிக்கா (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.04.19
பதிவு இல. : பீவீ 121720
பதிவு முகவரி : இல. 15, வெள்ளவத்தை, ஹிக்கடுவை

கம்பனியின் பெயர் : ட்ரவல்டியர் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.04.18
பதிவு இல. : பீவீ 121683
பதிவு முகவரி : டுல்ஹாரா வில்லா, மகுல் கரபகஹவத்த, 929/1/929, படுவத்த, தொடன்துவ, ஹிக்கடுவ

பணிப்பாளர்.

5-397

---

## பொது அறிவித்தல்

2017.02.13 ஆம் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்ற அறிவித்தல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் வழங்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஆர் . எம். பவுண்டேசன் லங்கா
கம்பனியின் இலக்கம் : ஜீ ஏ 3302
பதிவு முகவரி : 51, லயனல் எதரிசிங்ஹ மாவத்தை, கொழும்பு 5

பணிப்பாளர்.

5-398

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டிஎன்ட் டி இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 121260
பதிவு முகவரி : இல. 16/7B, டி ஃ பொன்சேக்கா பிளேஸ், கொழும்பு 5

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.30*

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

*5-402*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்:-*

*கம்பனியின் பெயர் : சிஹின லங்கா இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.04.19*
*பதிவு முகவரி : இல. 129/7 ஏ, தூவ வீதி, பெத்தகான பிட்டகோட்டே*
*பதிவு இல. : பீவீ 121725*

கம்பனிச் செயலாளர்.

*5-413*

---

## அறிவித்தல்

மௌனற் லெவினியா ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டட்டுடனான சிலோன் ஹொடெல்ஸ் லிமிட்டட்டின் உத்தேச ஒன்றிணைப்பு தொடர்பாக மௌனற் லெவினியா ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டட் பணிப்பாளர் சபையினால் பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவிப்பாகும்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 241 (4) (டி)* பிரிவின் பிரகாரம் இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளான மௌன்ற் லெவினியா ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. பீவீ 3217) மற்றும் சிலோன் ஹொடேல்ஸ் லிமிட்டட் (கம்பனி இல. பிபீ 614) என்பன (இதன் பிறகு கூட்டாக எனின் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகள்) எனவும் மற்றும் தனித்தனியே எனின் ஓர் ஒன்றிணைக்கப்படும் கம்பனியெனவும்' குறிக்கப்படும்) மௌன்ற் லெவினியா ஹொடேல் ( பிறைவேட் ) லிமிட்டட்டுடன் ஒன்றிணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டு, மௌன்ற் லெவினியா (பிறைவேட்) லிமிட்டட்டாக தொடர்ச்சியாக செயற்படும் என்பதாகும். மேலும் பொது மக்களுக்கு இத்தால் அறிவுறுத்தப்படுவதாவது,

1. ஒன்றிணையும் கம்பனிகளின் பதிவு அலுவலகத்தில் ஒன்றிணையும் பிரேரணைகளின் பிரதிகள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு 7, ஸ்ரீமத் ஆர்.ஜீ. சேனாநாயக்கா மாவத்தை, (முன்னர் கிறகரீஸ் வீதி) இல. 59 இல் ஒன்றிணையும் கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது ஒன்றிணையும் கம்பனியின் கடப்பாடுடைய எந்தவொரு நபருக்கும் மற்றும்

2. ஒரு வேண்டுதலை கம்பனிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரு ஒன்றிணையும் கம்பனியின் பங்குதாரர் , கடனாளி அல்லது கம்பனியின் கடப்பாடுடைய எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட ஒன்றிணைப்புப் பிரேரணையின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்காக உரித்துடைமையைக் கொண்டுள்ளார் என்பதாகும்.

ஒன்றிணையும் கம்பனிகள் இரண்டினதும் பதிவு அலுவலகம் இல. 100, ஹொடெல் வீதி, மௌன்ற் லெவினியா என்பதாகும் .

மௌன்ற் லெவினியா ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டட்டின் சபை கட்டளைப் பிரகாரம்,

பி.ஆர். செக்கிரெடேரியல் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
பணிப்பாளர்.

*5- 429/1*

---

## அறிவித்தல்

மௌனற் லெவினியா ஹொடேல் (பிறைவேட்) லிமிட்டட்டுடனான சிலோன் ஹொடெல்ஸ் லிமிட்டட்டின் உத்தேச ஒன்றிணைப்பு தொடர்பாக சிலோன் ஹொடேல்ஸ் லிமிட்டட் (பணிப்பாளர் சபையினால் பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவிப்பாகும்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 241 (4) (டி)* பிரிவின் பிரகாரம் இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளான மௌன்ற் லெவினியா ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. பீவீ 3217) மற்றும் சிலோன் ஹொடேல்ஸ் லிமிட்டட் (கம்பனி இல. பிபீ 614) என்பன (இதன் பிறகு கூட்டாக எனின் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகள்) எனவும் மற்றும் தனித்தனியே எனின் 'ஓர் ஒன்றிணைக்கப்படும் கம்பனியெனவும்' குறிக்கப்படும்) மௌன்ற் லெவினியா ஹொடேல் ( பிறைவேட் ) லிமிட்டட்டுடன் ஒன்றிணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டு, மௌன்ற் லெவினியா (பிறைவேட்) லிமிட்டட்டாக தொடர்ச்சியாக செயற்படும் என்பதாகும். மேலும் பொது மக்களுக்கு இத்தால் அறிவுறுத்தப்படுவதாவது,

1. ஒன்றிணையும் கம்பனிகளின் பதிவு அலுவலகத்தில் ஒன்றிணையும் பிரேரணைகளின் பிரதிகள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு 7, ஸ்ரீமத் ஆர்.ஜீ. சேனாநாயக்கா மாவத்தை, (முன்னர் கிறகரீஸ் வீதி) இல. 59 இல் ஒன்றிணையும் கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது ஒன்றிணையும் கம்பனியின் கடப்பாடுடைய எந்தவொரு நபருக்கும் மற்றும்

2. ஒரு வேண்டுதலை கம்பனிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரு ஒன்றிணையும் கம்பனியின் பங்குதாரர் , கடனாளி அல்லது கம்பனியின் கடப்பாடுடைய எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட

ஒன்றிணைப்புப் பிரேரணையின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்காக உரித்துடைமையைக் கொண்டுள்ளார் என்பதாகும்.

ஒன்றிணையும் கம்பனிகள் இரண்டினதும் பதிவு அலுவலகம் இல. 100, ஹொடெல் வீதி, மௌன்ற் லெவினியா என்பதாகும் .

சிலோன் ஹொடெல் லிமிட்டட்டின் சபை கட்டளைப் பிரகாரம்,

பி.ஆர். செக்கிரெடேரியல் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
பணிப்பாளர்.

5- 429/2

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய, எரவ்வல, வீரோதார மாவத்தை, இல. 504/11 எனும் முகவரியில் குடியிருக்கும் சமிந்த சம்பத் தேகம்பட ( தேசிய அடையாள அட்டை இல. 780753684V)) ஆகிய நான், பன்னிப்பிட்டிய, எரவ்வல, வீரோதார மாவத்தை, இல. 504/11 எனும் முகவரியில் குடியிருக்கும் கமலபானி தர்ஷனி தேகம்பட ( தேசிய அடையாள அட்டை இல. 807200976 V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2015.06.03 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு பவித்ரா சீ. லியனகே அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 1472 என்ற அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சமிந்த சம்பத் தேகம்பட.

5- 221

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 13, வாசல வீதி, இல. 26 மற்றும் தற்போது 175 வைசால் ரோட், நோர்த்பீல்ட், பேர்மின்ங்ஹெம், டீ 313யுஓ, ஐக்கிய இராச்சியம் எனும் முகவரியில் குடியிருக்கும் மேரி சுபாஜினி மிஸ்ஸியர் (திருமணத்திற்கு முன்னர்) பெர்ணான்டோ ஆகிய நான், மடுதீன் ஜயசீலன் பெர்ணாண்டோ என்பவருக்கு வழங்கப்பட்ட முதலாம் மாடி, 343 லண்டன் ரோட், க்ரொய்டொன் எனும் முகவரியுடைய பிரசித்த நொத்தாரிசு எஸ். தவநேசன் அவர்களால் 2012.11.12 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டு, பத்தரமுல்லை பதிவாளர் ஆணையாளர் திணைக்களத்தில் நாட்பதிவேட்டு இல. 12422 தொகுதி இல. 2-போலியோ இல. 86 இல் பதிவு செய்யப்பட்டுள்ள பொது அற்றோணித்தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் தருகின்றேன்.

மேரி சுபாஜினி மிஸ்ஸியர்.

5- 306

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மிரிஸ்ஸ, உடுபில, காலி வீதியில் வசிக்கும் திகன ஆரச்சிகே மெனிக் ருவனீ என்பவருக்கு இஸ்ரவேலின் இலங்கை உயர் ஸ்தானிகர் திரு.பி.பி. வீரசேகர அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.06.17 ஆம் திகதியுடைய அற்றோணித்தத்துவமானது, அற்றோணிதாரரான மிரிஸ்ஸ, உடுபில, தியகலனவத்தையில் வசிக்கும் ரேன்தகே கல்யாணி ஆகிய என்னால் இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.

5- 327

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மிரிஸ்ஸ, உடுபில, காலி வீதியில் வசிக்கும் திகன ஆரச்சிகே மெனிக் ருவனீ என்பவருக்கு, மிரிஸ்ஸ, உடுபில, தியகலனவத்தையில் வசிக்கும் ரேண்தகே கல்யாணி ஆகிய என்னால், பிரசித்த நொத்தாரிசு திரு. ஜே.ஏ. அதுல அவர்களினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1102 ஆம் இலக்கமும் 2013.08.13 ஆம் திகதியுடைய அற்றோணித்தத்துவம் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக் கப்படுகின்றதென பொது மக்களனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

5- 326

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

திவலப்பிட்டிய, போமுகம்மன, சிசிலஇம, இல. 166/27 எனும் முகவரியில் குடியிருக்கும் கீரகல ஆரச்சிலாகே திஸ்ஸ விஜேநாயக ஆகிய நான், ஹுனுமுல்ல, கெஹெல்எல்ல தெற்கு, இல. 193/சீ எனும் முகவரியில் குடியிருக்கும் பேலி முதியன்செலாகே சுஜித் ரஞ்சன் கருணாதிலக என்பவருக்கு வழங்கப்பட்ட 2017.01.04 ஆம் திகதி

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு வன்னி அச்சிகே கசுனி தாரகா வன்னி ஆரச்சி அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 32 என்ற விசேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும், இதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் குறித்த நபரால் எனது சார்பாக புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாக மாட்டேன் என மேலும் அறியத்தருகின்றேன்.

கீரகல ஆரச்சிலாகே திஸ்ஸ விஜேநாயக.

2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27.

5- 356

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்கா, டெக்ஸாஸ் 78745, ஒஸ்டின், பெக்ஸ்டர் ஸ்பிரிங்ஸ் வீதி, 8109 ஐச் சேர்ந்த N 2009436 இலக்க இலங்கைச் கடவுச் சீட்டுக்கு உரித்தாளரான, திரன்ஜனி விஜே நாயக்கா ஆகிய நான், இத்தால் அறிவித்துக் கொள்வதாவது, 2016, ஒகத்து 3 ஆம் திகதியிடப்பட்ட டெக்ஸாஸ் மாநில பிரசித்த நொத்தாரிசு ஸ்டீவன் குரேரா வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலங்கை, எஹலியகொடை, விஜேநாயக்கா மாவத்தையைச் சேர்ந்த, பன்னவலகே அனில் விஜே நாயக்காவிற்கு ( தே.அ.அ.இல. 611210106V) வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித்தத்துவம் இது முதற்கொண்டு இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது என்பதாகும்.

5- 414

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்தினபுரி, பண்டாரநாயக்கா மாவத்தை, இலக்கம் 59AF இல் வதியும் எம்.ஏ.உதய அமரநாத் பீரிஸ் ( தே.அ.அ.இலக்கம் 792010075V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திரு. அநுர மனம்பேரியால் 2016.02.12 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்தப்படுத்திய 7109 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம், இரத்தினபுரி, ஹிதெல்லண, சரணங்கர மாவத்தை, இலக்கம் 12/7 இல் வதியும் டீ.எம். தயாரத்ன (தே.அ.அ. இலக்கம் 663242083V) என்பவர் எனது அற்றோணித் தத்துவதாரராக செய்துகொள்ளப்பட்ட நியமனம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செயலிழக்கப்பட்டதாகவும், டீ.எம். தயாரத்ன (தே.அ.அ.இலக்கம் 663242083V) என்பவர் இதுமுதற் கொண்டு என்னுடன் செய்து கொள்ளப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் பொறுப்பாக இருக்க மாட்டாரென இலங்கைக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

எம். ஏ.யூ.ஏ. பீரிஸ்.

5- 403

---

# ஏல விற்பனைகள்

## டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டதும்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

**526 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்**

முதலாம் பகுதி

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம் பற்று, தண்டுகம, ஜாஎல பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட ஏக்கல - குருந்துவத்த கிராமத்தில் அமைந்தள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.டீ. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதியிடப்பட்ட 4034Dஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 16 மற்றும் துண்டு 21 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டு**

**காணியின் விஸ்தீரணம்:**

| துண்டு | அளவு |
|---|---|
| துண்டு 16 | 00 ஏ. 00.றூ. 10 பே. |
| துண்டு 21 | 00 ஏ. 00.றூ .8.10 பே. |

**குறித்த காணியூடாகச் செல்லும் பாதை உரிமையுடன்**

**மேற் கூறப்பட்ட ஏக்கல- குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.டீ. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு மே மாதம் 09ஆந் திகதியிடப்பட்ட 4034D ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு22 மற்றும் துண்டு 23 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

**காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 31.66 பே. மற்றும் 00 ஏ. 00.றூ. 1.25 பே. முறையே**

*மேற்கூறப்பட்ட காணித்துண்டுகள் கீழ்க் குறிப்பிடப்படும் காணியின் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டுகளாகும்.*

மேற் கூறப்பட்ட ஏக்கல- குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஈ.ஜே.பீ. பெரேரா அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதியிடப்பட்ட 8804 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு P எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.

காணியின் விஸ்தீரணம்: 03 ஏ. 00.றூ. 00 பே. அல்லது ஒன்று தசம் இரண்டு ஒன்று நான்கு பூச்சியம் ஆறு ஹெக்டேயர் ( 1.21406Ha)
நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 8804 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய,

இரண்டாவது பகுதி

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம்,அலுத்குரு கோரளே றாகம்பற்று ,ஜாஎல தண்டுகம பிரதேச சபை எல்லைக்களுக்கு உட்பட்ட ஜாஎல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 205ஆவது கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள ஏக்கல- குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.டீ. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 4034 M ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக

*காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 14 பே. அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஐந்து நான்கு ஹெக்டேயர் (0.0354 Ha) மேற் குறிப்பிடப்பட்ட 4034 M ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய மேற்கூறப்பட்ட காணித்துண்டு கீழ்க் குறிப்பிடப்படு காணித்துண்டுகளின் ஒன்றிணைப்பாகும்*

*மேற் கூறப்பட்ட 205 ஆவது கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏக்கல-குருந்து வத்த கிராமத்தில் அமைந்துள்ள் ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம்.டீ.எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதியிடப்பட்ட ( மிகச் சரியாகக் குறிப்பிடுவதாயின் 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி) 4034 G ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 03, துண்டு 4, துண்டு 05 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்ட துமான காணித்துண்டு மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.*

காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 08 பே. (ஒவ்வொரு காணித்துண்டும்)

நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட 4034G ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம்,அலுத்குரு கோரளே றாகம்பற்று ,ஜாஎல தண்டுகம பிரதேச சபை எல்லைக்களுக்கு உட்பட்ட ஏக்கல- குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.டீ. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 4034 G ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 07 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டு மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக,

காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 01.றூ. 00 பே.
நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 4034G ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய பாதை உரிமையுடன்.

மேற்கூறப்பட்ட ஏக்கல- குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள ஜொசிதாவத்த என அழைக்கப்படும் அனுதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.டீ.எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 4034G ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக .

காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 29.25பே.
நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட4034G ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய,

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. டி. வீ. வனசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட 526 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், சட்டத்தின்படி கூட்டிணைந்த PV 6750 என்ற பதிவு இலக்கத்தை உடைய ஜா- எலயில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ரணசிங்க ஹோம்ஸ் ( பிறைவேட் ) லிமிட்டட் நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2017ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிசெவ்வாய்க்கிழமை மு.ப.11.00மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,73,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 1000 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : 24, டொரிங்டன் வீதி, கண்டி. | நகர அலுவலகமும் காட்சியறையும்: 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5- 252

---

## டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

**613 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட, அலுத்குரு கோரளே றாகம் பற்று, ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவை யாளர் ஐ.ஏ.சி.சேனாரத்ன அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட 3913 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

காணியின் விஸ்தீரணம்:

03 ஏ. 02.றூ. 26.25 பே.
நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 3913 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய

**வழி மற்றும் பாதை உட்செல்லல் வெளிச்செல்லல், திரும்பிச் செல்லல் என்பனவற்றில் பூரணமான சுதந்திரமான உரிமையையும் சுதந்திரத்தையும் அனுமதியையும் கொண்ட குத்தகைக்காரர் அவரிடம் வருகையாளர்கள், பொறியிய லாளர்கள், ஒப்பந்தக்காரர், கட்டிடக் கலைஞர்கள், தொழிலாளர்கள் ஊழியர்கள், குடியிருப்போர், அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள், அழைக்கப்பட்டவர்கள் ஆகியோர், வீதி நெடுகிலும் வீதிக்கு மேலாகவும், வீதிக்கான உரிமை மற்றும் அனுகூலங்களுடன் கால்நடையாகவோ அல்லது வேறு எந்த விதத்திலோ குதிரைகள் பூட்டிய அல்லது பூட்டப்பட்டாத வாகனங்கள், கால்நடைகள் ஏனைய விலங்குகள் மோட்டார் வாகனங்கள் அல்லது லொறிகள் அல்லது கீழே விபரிக்கப்பட்ட பொருட்கள் பற்றிய அல்லது ஏற்றப்படாத எத்தகைய வாகனங்கள், சகல வேளைகளிலும் அவர்களது விருப்பத்தின் பேரிலும் பகலில் அல்லது இரவில் போகவும் வரவும் ஊடாகச் செல்லவும் மீண்டும் ஊடாக வரவும் உபயோகிக்கப்பட்டதும் அனுபவிக்கப்பட்டதும் மற்றும் மின் கம்பிகள் உயரத்தில் அமைக்கப்படும் மின் கம்பிகள் வடிகால்கள், எரிவாயு மற்றும் நீர் விநியோகக் குழாய்கள், உபகரணங்களின் மேலாகவும் அல்லது ஊடாகவுமுள்ள எந்தவொரு வருகையினதும்.**

மேற்குறிப்பிட்ட அலுத்குரு கோரளே, றாகம் பற்று ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் என அழைக்கப்படும் 882 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 13 எனக் குறிக்கப்பட்டுள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரிக் கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 26.00 பே.

நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 882 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய

மேற்குறிப்பிட்ட அலுத்குரு கோரளே, றாகம் பற்று ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் என அழைக் கப்படும் 882 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 24 எனக் குறிக்கப்பட்டுள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு.

காணியின் விஸ்தீரணம்: 00 ஏ. 00.றூ. 26.00 பே.

நீர்கொழும்புக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 882 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய.

**மேலே குறிப்பிடப்பட்ட காணி, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம்.டீ .எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதிய 4173ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் அளவைக்கு ஏற்ப பின்வருமாறு மீள் அளவை செய்யப்பட்டு உப பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளது.**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம்,அலுத்குரு கோரளே றாகம் பற்று , ஜாஎல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் என அழைக்கப்படும்அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம்.டீ. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 4173ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 20, துண்டு 22 மற்றும் துண்டு 23, துண்டு 25, துண்டு 27-31, துண்டு 37, துண்டு 43 மற்றும் துண்டு 45 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

**காணியின் விஸ்தீரணம்:**

| துண்டு | அளவு |
|---|---|
| துண்டு 20 | 00 ஏ. 00.றூ. 10 பே. |
| துண்டு 22 | 00 ஏ. 00.றூ.10 பே. |
| துண்டு 23 | 00 ஏ. 00.றூ. 10 பே. |
| துண்டு 25 | 00 ஏ. 00.றூ.10 பே. |
| துண்டு 27 | 00 ஏ. 00.றூ. 10 பே. |
| துண்டு 28 | 00 ஏ. 00.றூ.11 பே. |
| துண்டு 29 | 00 ஏ. 00.றூ. 13.25பே. |
| துண்டு 30 | 00 ஏ. 00.றூ.12.7பே. |
| துண்டு 31 | 00 ஏ. 00.றூ. 10.25 பே. |
| துண்டு 37 | 00 ஏ. 00.றூ.10 பே. |
| துண்டு 43 | 00 ஏ. 00.றூ. 10 பே. |
| துண்டு 45 | 00 ஏ. 00.றூ.10.4 பே. |

**பின்வரும் காணியின் ஊடாக அமைந்துள்ள பாதை உரிமையுடன்**

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம் பற்று, ஜா-எல பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் அம்.டீ.எட்வர்ட் அவர்களினால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதியிடப்பட்ட 4173 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 46-51 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு***

**காணியின் விஸ்தீரணம்:**

| துண்டு | அளவு |
|---|---|
| துண்டு 46 | 00 ஏ. 00.றூ. 18.5பே. |
| துண்டு 47 | 00 ஏ. 00.றூ.29.5பே. |
| துண்டு 48 | 00 ஏ. 00.றூ. 39.1 பே. |
| துண்டு 49 | 00 ஏ. 00.றூ.19.5பே. |
| துண்டு 50 | 00 ஏ. 00.றூ. 3.3 பே. |
| துண்டு 51 | 00 ஏ. 00.றூ.14.6 பே. |

*கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. டி. வீ. வனசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 613 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டததின் கீழ் சட்டத்தின்படி கூட்டிணைந்த PV 6750 என்ற பதிவு இலக்கத்தை உடைய ஜா- எலயில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ரணசிங்க ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினால் டிஎப்சிசி வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

டிஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2017ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிசெவ்வாய்க்கிழமை ந.ப.12.00மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்);

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,73,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும்ஏலம்கூறுவோர் கட்டணம் 1000 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : 24, டொரிங்டன் வீதி, கண்டி. | நகர அலுவலகமும் காட்சியறையும்: 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5- 253

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*(டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் பதிலாள்)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***1487 மற்றும் 1850 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பற்று மஹரகம நகரசபை எல்லைகளில் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பன்னிப்பிட்டிய தெற்கு 531/A கிராம அலுவலர் பிரிவு பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள வெலி அம்புகஹவத்த என அழைக்கப்படும் அனுதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ.ஆர். சில்வா அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 4405 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.**

**காணியின் விஸ்தீரணம்:**

***00ஏ. 00.றூ. 30பே. (0.0758 ஹெக்டேயர்) தெல்கந்த காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 4405 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய.***

**மேற்குறிப்பிடப்பட்ட காணி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு காணித்துண்டுகளின் மீள் அளவை செய்யப்பட்ட ஒன்றிணைப்பாகும்.**

**பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள மேலே கூறப்பட்ட காணி வெலிஅம்புகஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் பி.ஜீ.டீ.வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1995 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு $A^3$ எனக் குறப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.**

**காணியின் விஸ்தீரணம்:**

***00ஏ. 00.றூ. 15பே. (0.0379 ஹெக்டேயர்) அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அனைத்தும் அடங்கலாக தெல்கந்த காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய.***

***2. பன்னிபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள மேலே கூறப்பட்ட காணி வெலிஅம்புகஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்தீரம் பெற்ற நிலஅளவையாளர் பி.ஜீ.டீ.வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1995 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு $A^2$ எனக் குறப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டுதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.***

**காணியின் விஸ்தீரணம்:**

***00ஏ. 00.றூ. 15பே. (0.0379 ஹெக்டேயர்) அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அனைத்தும் அடங்கலாக தெல்கந்த காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய.***

***அதன் ஊடாக அமைந்துள்ள பாதை உரிமையுடன்,***

***1. பன்னிபிட்டிய கிராமத்தில் அமைந்தள்ள மேலே கூறப்பட்ட காணி வெலிஅம்புகஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் பி.ஜீ.டீ.வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1995 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு $A^5$ எனக் குறிப்பிடப்பட்டுள்ள (10 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது) பிரிக்கப்பட்டுதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.***

**காணியின் விஸ்தீரணம்:**

***00ஏ. 00.றூ. 5.90பே. (0.0149 ஹெக்டேயர்) தெல்கந்த காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 3098 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய.***

***2. பன்னிபிட்டிய கிராமத்தில் அமைந்தள்ள மேலே கூறப்பட்ட காணி வெலிஅம்புகஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. கப்புகீகியனகே அவர்களால் வரையப்பட்ட 1972ஆம் ஆண்டுநவெம்பர் மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 4402 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள (12 அடி அகலமான) காணித்துண்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு***

*கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ.வை.தேவசுரேந்திர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 1487 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதியிடப்பட்ட 1850 ஆம் இலக்க பிணை பிணை உறுதி மூலம் பன்னிபிட்டியவில் வசிக்கும் அருமஹந்தி பிரியந்தி பிரஷேல் கிரிஷானா டி சில்வா எனவும் அருமஹந்தி பிரியந்தி பிரஷேல் கிருஷ்னா டி சில்வா மற்றும் அரும ஹந்தி குலேஷ்வர சந்தன பிரிஞ்ஜித் பியசேன டி சில்வா எனவும் அருமஹந்தி குலேஷ்வர சந்தா பிரிஞ்ஜித் பியசேன டி சில்வா ஆகியோரால் டீஎப்சிசி வங்கி பீஎல்சீக்கு (டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

*டீஎப்சீசீ பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2017ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 85,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 1000 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5- 254

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ —நாராஹேன்பிட்டிக் கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விலை மதிப்புமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

**கடன் எடுத்த சந்திரசேகர முதியன்சலாகே நிலந்த லக்ஷ்மன் குமார மங்கல சந்தரசேகர ஹற்றன் நெஷனல் வங்கி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி.என். பெரேராவின் 2011.07.27 ஆம் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 7458 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய முற்பணத்தில் மிகுதி தொகையும் வட்டியும் மற்றும் ஏலதாரரின் சொல்லப்பட்ட கட்டணங்களையும் மற்றைய கட்டணங்களையும் அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்**.

கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம் , கொழும்பு மாவட்டம் பல்லே பத்து ஏலகம் கோரளையில் ஹோமாகம மாவட்ட செயலாளர் எல்லையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் இலக்கம் 500 பிராமணகம கிராம அலுவலர் தொகுதியில் பிராமணகம கிராமத்தில் அமைந்துள்ள லாவுலுகாவத்த காணியின் நில அளவையாளர் பி.எச்.பெரேராவின் 22 மற்றும் 1985.07.24 ஆம் திகதியுடைய வரைபட இலக்கம் 831/A இல் காண்பிக்கப்பட்ட லொட் 3B யில் பகுதிபடுத்திய நிலஅளவையாளர் எம். சமரநாயக்கவின் 2007.02.17 ஆம் திகதியுடைய வரைபட இலக்கம் 10090 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3B1.

இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.12.5பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து .

மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 10090 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3ட2 (2 1/2 அடி றோட்) மற்றும் நில அளவையாளர் பி.எச்.பெரேராவின் 1985.07.22 ஆம் திகதியுடைய வரைபட இலக்கம் 831 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 ( 10 அடி றோட் தற்சமயம் 17 அடியாக்கப்பட்டுள்ளது) பாவிக்கும் உரிமையுடனும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2017.03.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.03.23 ஆந் திகதியுடைய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்**.- கொட்டாவவில் இருந்து ஹொரன பிரதான றோட்டில் 4.2 கி. மீற்றர் பிராமணகம வரை சென்று இடது பக்கம் திரும்பி கொழும்பு 2 ( பள்ளிக்கூடம் முன்பு உள்ளது) 250 மீற்றர் இடது பக்கம் திரும்பி 250 மீற்றர் சென்று இடது பக்கம் திரும்பி வீடுகளுக்கு செல்லும் றோட்டில் 50 மீற்றர் சென்று பிறகு ஆதனம் வலது பக்கம் உள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;

(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;

(6) விற்பனை சம்பந்தமாக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணமாக வங்கிக்கு செலுத்த வேண்டும்.மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 30 நாட்களுக்குள் முற்பணம் திருப்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393

5- 337

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை பற்றிய அறிவித்தல்

பத்ரகெட்டிய, சினமன் எஸ்டேட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பனி என்னும் பெயரும் மகுடத்தின் கீழ் பங்காளர்களாக வியாபாரம் செய்யும் வடுமெஸ்திரகே பியல் செனவிரத்ன மற்றும் பெதுருஹேவா சம்பிக சயமாலி ஆகியோருக்கு தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ வழங்கிய வசதிகளுக்கு கீழே காணப்படும் ஆதனங்கள் பிணைப்பொறுப்பாக பெற்றுக்கொள்ளப்பட்டது. அவர்கள் 603, 637 மற்றும் 1085 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் கீழ் வழங்கப்பட்ட அத்தகைய வசதிகளை மீளச் செலுத்தத் தவறிவிட்டனர்.

தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய பன்வரும் ஆதனங்களை நான் பகிரங்க மூலம் விற்பனை செய்வேன்.

**1 ஆவது ஏலம்**

பொருபன வீதி முடிவில் வலகம்பமாவத்தையில் தெலவல கிராமத்தில் பொருபென கிராம அலுவலர் பிரிவு இல. 548 மற்றும் மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு மொரட்டுவ மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பெறுமதிமிக்க காணியும் வளாகமும் விஸ்தீரணம் 20 பேர்ச்சு.

1566 ஆம் இலக்க படத்தில் காணித்துண்டு 36 A என அடையளமிடப்பட்டுள்ள மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் பொருபன வீதி முடிவில் வலகம்ப மாவத்தையில் தெலவல கிராமத்தில் பொருபென கிராம அலுவலர் பிரிவு இல. 548 மற்றும் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு மொரட்டுவ மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள லேடி கதரைன் குரூப் என அழைக்கப்படும் காணியும் அதனுள் அடங்கியுள்ள சகலதும்.

அத்துடன் மேலே நன்கு விபரிக்கப்பட்ட காணித்துண்டில் உள்ள மின்சார வழங்கல் முறைமை உபகரணங்கள் நீர் வழங்கல் முறைமை உபகரணம் தொலைத்தொடர்பு உபகரணம் மற்றும் வாயுசீராக்கி உள்ளடங்கலாக தற்போது பொருத்தப்பட்டுள்ள அல்லது இதன் பின் அல்லது காலத்துக்குக் காலம் பொருத்தப்படவுள்ள அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள அசையாப் பொறிகள் இயந்திரங்கள் உபகரணங்கள் அனைத்தும் 2017, யூன் 2 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு அவ்விடத்தில் என்னால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- காலி -கொழும்கு வீதி ஊடாக பொருபன சந்தி வரை பயணித்து வலது பக்கம் திரும்பி மீண்டும் பொருபன வீதியில் ஏறத்தாழ 1/4 மைல் சென்று வலகம்பா மாவத்தையை அடையவும். அதன்பின் சில யார்கள் சென்றதும் குறித்த காணியை வீதியின் வலப்பக்கம் காணலாம். இது அமெரிக்கன் சென்டருக்கு ஏறத்தாள எதிரேயுள்ளது.

**2 ஆவது ஏலம்**

2014, பெப்புருவரி 26 ஆம் திகதியிடப்ப்பட 155/2014 ஆம் இலக்க படத்தில் காணித்துண்டு இல. 1 என அடையாளமிடப்பட்டுள்ள தென் மாகாணம், காலி மாவட்டம் கரந்தெனிய பிரதேச சபை எல்லையினுள் பட்பொல கிராமத்தில் அமைந்துள்ள காணி விஸ்தீரணம் 23 ஏக்கர் 3 றூட் 30.91 பேர்ச்.

பத்ரகெட்டிய எஸ்டேட் என அழைக்கப்படும் காணித்துண்டுகள் C,D,E,E1,E2,E3,E4,E5 மற்றும் காணித்துண்டு 1B இனது துண்டு E6 ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K.W.S.K விக்னராஜா அவர்களால் மீள அளக்கப்பட்டு 2014, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியிடப்பட்ட 155/ 2014 ஆம் இலக்க படத்தில் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணி.

அத்துடன் மேலே நன்கு விபரிக்கப்பட்ட காணித்துண்டில் உள்ள மின்சார வழங்கல் முறைமை உபகரணங்கள் நீர் வழங்கல் முறைமை உபகரணம் தொலைத்தொடர்பு உபகரணம் மற்றும் வாயுசீராக்கி உள்ளடங்கலாக தற்பொது பொருத்தப்பட்டுள்ள அல்லது இதன் பின் அல்லது காலத்துக்குக் காலம் பொருத்தப்படவுள்ள அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள அசையாப் பொறிகள் இயந்திரங்கள் உபகரணங்கள் அனைத்தும் 2017, யூன் 2 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு அவ்விடத்தில் என்னால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- அம்பாலாங்கொடையிலிருந்து பட்டபொல வீதி ஊடாக இடப்பக்கமுள்ள பிரதேசசபை வீதிவரை ஏறத்தாழ 4 கீ.மீ பயணிக்கவும் . இது பொப்பேதுடுவ சந்திக்கு சில மீற்றர் தூரத்திலுள்ளது. பின் இடப்பக்கம் திரும்பி 150 மீற்றர் சென்று வலப்பக்கம் திரும்பி 100 மீற்றர் சென்றால் குறித்த காணியை வீதியின் இடப்பக்கம் காணலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2017.04.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.03.27 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின", மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து சதவீதம்);
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% மற்றும் VAT;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) ஏலத்திற்காகச் செலவிடப்பட்ட முழு விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 3,000;
(6) விற்பனையை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் ஒவ்வொரு விற்பனைக்கும் ரூபா 7,500.

மிகுதி 90% கொள்வனவு விலை ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேற்படி வங்கியில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

**மேலதிக விசாரணைகளுக்கு**: முகாமையாளர் கடன் அறவீடுகள், தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ, இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசிகள்: 011-2448448,011-7448448.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளரும்
மதிப்பீட்டாளரும் பட்டயம் பெற்ற
ஏல விற்பனையாளரும்.

இல.134,
பெத்தகான வீதி,
கோட்டே.

தொலைபேசி இல.: 011-2873656, 0777- 672082.
தொலை நகல் இல.: 2871184.

5-363

---

## நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ(யாழ்ப்பாணக் கிளை)

பகிரங்க ஏல விற்பனை

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுன்டிக்குளி கிராமத்தில் ஸ்வாட்ஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள "மஞ்சானவடி வளவு" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். சிவராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.08.24 ஆம் திகதியிடப்பட்ட 189 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டு மற்றும் அதனுள்ளடங்கும் இருமாடி வீடும், மரங்கள், பயிர்கள், கிணறு மற்றும் சகலதுமாகும். இது இரண்டு V. C. லாட்சம் மற்றும் இரண்டு தசம் ஒன்று ஐந்து குழிகள் பரப்பளவானதாகும். (02 Lms VC மற்றும் 2.15 Kls)

இவ்வாதனம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்பு மாரியா என்டனி மற்றும் ஜெயசீடா ஜொசபில் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக நெஷனல் டிவலப்பமன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்** - யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து வைத்தியசாலை பாதையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் சுன்டிக்குளி U.S. ஹோட்டலை அடையலாம். இந்த ஹோட்டலுக்கு முன்னால் வைத்தியசாலை பாதையில் வலதுபக்கத்திலுள்ள ஸ்வாட்ஸ் ஒழுங்கைக்குள் பிரவேசித்து மேலும் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனத்தை 2017.05.31 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 2017.04.21 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.04.07 ஆந் திகதிய "திவயின" "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- :-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேசசபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதல் மிகுதி 90% மும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனைநாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "முகாமையாளர் மையப்படுத்தல் கடன் அறவிடுதல்), நஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 071-4962449/071-8446374
தொலைநகல்: 081-2210595

5- 396

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இலக்கங்கள்: 70843019, 74880655, 74880886

அளுத்கம,களுவாமோதர வடக்கு, கம்மத வீதி, ''சுனில்'' என்னும் முகவரியில் அமைந்த திருவாளர்கள் ஷெமுக் வித் ரைன் நிறுவனத்தின் ஏக உரிமையாளர் திரு. குணமுனி சுனில் ஆனந்த டி சில்வா ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக் கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.02.03ஆம் திகதிய 1831 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.01.24 ஆந் திகதிய தினகரன், டெய்லி நியூஸ், தினமின ஆகிய பத்திரிகை களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் , அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. M.H.T. கருணாரத்ன ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2017.05.30 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுன தெற்கு அளுத்கம பத்தையில் பேருவளை பிரதேச செயலாளர் பிரிவு (மெலவன்பத்த உப - அலுவலகம்) பேருவளை பிரதேச சபை எல்லைகளுள் களுவாமோதர கம்மத்த கிராம அலுவலர் பிரிவு இல. 760இல் களுவாமோதரயில் அமைந்த கம்மத்த வீதி வரிமதிப்பிலக்கம் 53/ 10 ஐக் கொண்ட ''பட்டுவத்த கமராலகேவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். டபிள்யூ. பெரேரா தயாரித்த 2004, ஓகத்து 25 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2678 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : தற்போது எச். ரீ. புஷ்பகுமார டி சில்வா மற்றும் ஏனையோர்களுக்கு சொந்தமான காணியும் முன்னைய எலயும் ; கிழக்கு : தற்போது ஈ. ஏ. சம்பா டி சில்வா மற்றும் ஏனையோர்களுக்கு சொந்தமான காணியும் முன்னைய வனத்தியாவத்தயும் ; தெற்கு: தற்போது எச். நெல்ஷன் டி சில்வாவுக்கு சொந்தமான காணியும் முன்னைய பட்டுவத்தயும்; மேற்கு : களுவாமோதர கங்கையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2678 இன்படி றூட் மூன்று பேர்ச் (0ஏ. 3று. 8.59பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் D 30/5 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. கே. டபிள்யூ. எச். ரத்னவீர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி.
பெந்தொட்டை கிளை.

5-416

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.